## 2023 ஆம் ஆண்டிற்கான விநியோகத்தர்கள் / ஒப்பந்ததாரர்கள் பதிவைப் புதுப்பிப்பதற்கான பொதுவான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

## பாதுகாப்பு அமைச்சு

1. 2023 வருடத்திற்கு விநியோகத்தினர் /ஒப்பந்தகாரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பபடிவம் பாதுகாப்பு அமைச்சின் வலைதளத்தில் மூலம் 2022.10.10 திகதி தொடக்கம் 2022.11.11 ஆம் திகதி வரை கட்டணம் இன்றி தரவிரக்கம் (Download) செய்ய முடியும்.

2. சரியான தகவலை மட்டும் வழங்கும் படி விண்ணப்பதாரிகளிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. வழங்கப்பட்ட எந்தவொரு தகவலும் தவரானது என கண்டறியப்பட்டால் அல்லது முக்கியமான தகவலை வழங்க மறுக்கின்றார் என அறியப்பட்டாள் பதிவு செய்யவதற்கான தகுதியற்றது. முழுமையற்ற அல்லது தெளிவற்று இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. துணை ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். அத்தகைய ஆவணங்கள் வரிசைப்படுத்த பட வேண்டும். பிரதான முதல் பக்கத்தில் வலது மூலையில் தொத்த பக்கங்களின் எண்ணிக்கையை குறிப்பிட வேண்டும்.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட் வேண்டும்**

அ. சட்டதரணியோ அல்லது பிரசித் நொத்தாரினால் உண்மையொன உறுதிப்படுத்தப்பட்ட சட்ட ஆவணங்களின் நகல்களை வழங்க வேண்டும் (2021.12.31 திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவை)

வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள் - ஒருகிணைப்பு விஞ்ஞாபனம் (Memorandum of Association அல்லது Articles of Association நகல் இணைக்கப்பட வேண்டும்)

பிற நிறுவனங்கள் - வணிக பதிவு சான்றிதழ் (தனிப்பட்ட மற்றும் கூட்டு வணிகம்)

ஆ. தேசிய முகவர்களால் வெளிநாட்டு வழங்குனர்களை பதிவு செய்வது தொடர்பாக பிரதான நிறுவனத்தின் பிரதான தலைமை அதிகாரியினால் கையொப்பமிடப்பட்ட அந்த நாட்டின் ஒரு சட்டத்தரணியினால் அல்லது பொது நொத்தாரிசினால் உண்மை உன உறுதிப்படுத்தப்பட்ட அசல் அட்டோர்னி அதிகாரத்தின் மூலம் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்பட் வேண்டும். இவ் அட்டோர்னி அதிகாரத்தின் செல்லுப்படியான காலம் தெளிவாக குறிப்பிடப்பட் வேண்டும் அந்த கால வரையரைக்கு 2023.01.01 திகதி தொடக்கம் 2023.12.31 திகதி வரை உள்ளடக்கப்பட வேண்டும். தொலை நகல், ஸ்கென் அல்லது வேறு முறைகளில் கீழ் அனுப்பி வைக்கப்படும் அட்டோர்னி உரிமம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (அசல் நகல் தேவை எனில் அதன் கோரிக்கையுடன் விண்ணப்பிக்கவும்).

இ. **வகை கட்டணம் செலுத்தும் வைப்புத்தொகை செலுத்தப்படும் வைப்பு சீட்டு அசல் (இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட) கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும்**

4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் தேவையான அனைத்து ஆவணங்களுடனும் ஒரு உறை கடிதத்துடன் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு கிடைக்கும் வகையில் 2021.11.11 ஆம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்ன் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட் வேண்டும்.

**கணக்காளர் (வழங்கல்)**

**பாதுகாப்பு அமைச்சு**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

தேசிய விநியோகத்தினர் தொடர்பான விண்ணப்பத்தை கொண்ட உறையின் மேல் இடது மூலையில் **"விநியோகத்தினர் பதிவு செய்தல் - 2023 (தேசிய)"**என்று குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு விநியோகத்தினர் அல்லது அவர்களது தேசிய முகவர்கள் **"விநியோகத்தினர் பதிவு செய்தல் - 2023 (வெளிநாடு)"** என்று குறிப்பிடப்பட வேண்டும்.

<u>**விண்ணப்பதாரருக்கு பொதுவான ஆலோசனைகள்**</u>

5. விண்ணப்பதாரர்க்ள ஒவ்வொரு பிரிவிற்கான பதிவு கட்டணமாக ரூபா 1800/= (ஆயரத்து எண்ணூறு) செலுத்த வேண்டும் மற்றும் வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் இதற்கான கட்டணமாக அமெரிக்கா டொலர் 18 அறவிடப்படும். தேசிய முகவர் ஊடாக கட்டணம் செலுத்தும் போது ஒரு குழுவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூபா. 6000/= ஆகும்.
   தேசிய விண்ணப்பதாரர் (பெரும்பாலும் ஒரு உள்ளூர் முகவர்) ஒன்றுக்கு மேற்பட்ட முக்கிய நிறுவனங்களில் பதிவு செய்ய விண்ணப்பிக்கிறார் என்றால், அது போன்ற ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (பணத்தை வைப்பிலிடும் போது கணக்கு வைத்திருப்பவரின் பெயரை பாதுகாப்பு செயலாளர் என்று குறிப்பிட்டு வைப்பிலிடும் பத்திரத்தில் "suppliers Registration Category Free – 2023" கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்)

6. இலங்கை வங்கி தப்ரொபேன் கிளையின் இலக்கம் 7040119 எனும் கணக்கிற்கு வரவு வைக்குமாறு இலங்கை வங்கி எந்தவொரு கிளையிலும் தொகுதி கட்டணத்தை செலுத்த முடியம். வெளிநாட்டு விநியோகத்தினர் (ஒரு தேசிய முகவர் இல்லாத நிலையில்) வகைக் கட்டணம் செலுத்துதல் ஒரு வகை பிரிவின் கீழ் பதிவு செய்ய தலா அமெரிக்கா டொலர் 18 என்றப்படி SWIFT CODE குறியீட்டை பயன்படுத்தி எந்த நாட்டிலும் எந்த வங்கியின் ஊடாக இலங்கை வங்கிக்கு கீழ் குறிப்பிட்ட முறையில் செலுத்த முடியும்.

| | | |
|---|---|---|
| **Swift No** | **-** | **BCEYLKLX** |
| **Branch Code** | **-** | **747** |
| **Account No** | **-** | **7040119** |

7. விண்ணப்பதாரர் செலுத்தும் தொகுதி கட்டணம் திருப்பித் செலுத்தப்பட மாட்டாது. விண்ணப்பதாரரின் கவனக்குறைவு அல்லது அலட்சியம் காரணமாக எந்த தகவலையும் கோரும் ஆவணத்தை சமர்ப்பிக்கவில்லை மற்றும் தவறான வகையைக் குறித்துள்ளார் என்ற காரணத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதோடு அவ் சந்தர்ப்பத்தில் வகை கட்டணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.

8. வாகன பாகங்களுக்கான "F" வகை மற்றும் "வாகன பழுதுபார்க்கும் "S" பிரிவின் துணை பிரிவான "Vehicle Repairing and Service Garages" வெவ்வேராக உள்ளது. "S" பிரிவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அதற்கேற்ப அந்த வகையைச் சேர்ந்த சேவைகளைச் செய்யும் திறன்களும் வசதிகளும் இருக்க வேண்டும். பதிவு நேரத்தில் அல்லது பதிவு செய்த பிறகு "S" பிரிவில் "வாகன பழுதுபார்க்கும் கேரேஜ்களை" "Vehicle Repairing and Service Garages" பதிவு செய்யும் நிறுவனங்கள் நிலையங்களை ஆய்வு செய்ய உரிமை உண்டு. தேவையான குறைந்தபட்ச தரநிலைகள் மற்றும் வசதிகள் இல்லாத சேவைப் வழங்கும் பதிவை ரத்து செய்யும் அதிகாரமும் இவ் அமைச்சுக்கு உண்டு.

9. பொருத்தமான கேள்விகளுக்கு எதிரே ஆம்/ இல்லை குறிச்சொற்களை தவராமல் நீக்குக.

10. தயவு செய்து விண்ணப்பதாரருக்கு பொருந்தாத எந்தவொரு பொருளுக்கு முன் ''பொருந்தாது'' என குறிப்பிடுக.

11. பதிவு செய்த பின்னர் ஒரு நிறுவனத்தின் (தேசிய அல்லது வெளிநாடு) அஞ்சல் முகவரியில் ஏதேனும் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் தொடர்பாக அந்த நிறுவனம் (தேசிய அல்லது வெளிநாட்டு) வழங்கிய திருத்தப்பட்ட சான்றிதழின் உண்மை நகலை கோரிக்கையுடன் சமர்ப்பித்தால் மட்டுமே கருதப்படும்.

12. பதிவு செய்யத பின் எந்தவொரு சூழ்நிலையிலும் **வகை வகைகளின்** எந்த மாற்றங்கள் மேற்கொள்ள முடியாது என்பதையும், வகைகளுக்கு இடையில் எந்த மாற்றமும் இல்லை என்பதை நினைவில் கொள்க.

13. விண்ணப்பதாரரின் எந்த தவறுகளுக்கும் அல்லது மேற்பார்வைக்கும் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்காது.

14. 2023 ஆம் ஆண்டிற்கான விநியோகத்தினர் பதிவு தொடர்பாக மேலதிக தகவல்கள் உங்களுக்கு தேவைப்பட்டால் தயவு செய்து பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்க
கணக்காளர் (வழங்கள்)
தொலைப்பேசி இல - **011 2447459**
**011 3030736** அல்லது **011 2430860**
( அலுவலக நேரங்களில் மட்டும்)
மின்னஞ்சல் - ***supply@defence.lk***

15. அரச கொள்வனவு வழிகாட்டி 2006 ( பொருட்கள் மற்றும் பணிகள்) படி 8.11.5 இ விதியின் படி ஆலோசனைக்கு அமைய நிபந்தனை மீறும் ஒப்பந்தகாரர்களின் பட்டியலில் பட்டியலிடப்பட்ட விநியோகத்தினர் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

16. விலை பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட பின் விநியோகத்திற்காக விநியோகத்தினர் தேவைக்குகேற்ப சரக்குகளை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் மேலும் அனைத்து விநியோகத்தினரும் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யும் போது ஒரு மாத கடன் வசதிக்கு தனாகவே ஒப்புக்கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. பொதுவாக பதிவு செய்யப்பட்ட விநியோகத்தினரிடம் இருந்து வரையறுக்கப்பட்ட விலை மனு கோரப்படுகின்றது. ஆயினும்கூட தேவைப்படும் போது விநியோகத்தர்களை தேர்ந்தெடுப்பதற்கான உரிமையை பாதுகாப்பு அமைச்சு பெற்றுள்ளது.

18. பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலிப்பதுடன், தேவையான தகுதி கொண்ட விண்ணப்பதாரிகளை மட்டுமே பதிவ செய்ய நடவடிக்கை எடுக்கும். பூர்த்தி செய்யப்படாத தேவைகளை திருப்பிகரமாக பூர்தி செய்யதா விண்ணப்பங்கள் நிராகரிக்கபடும்.

19. விலை மனு கோரலின் போது நான்கு முறை விலை மனு சமர்ப்பிக்கா தவரியவர்கள் அல்லது விலை வழங்க தவரிய (''NO Quote'') அல்லது சரிய நேரத்தில் ஒரு வேண்டுகோலை சமர்ப்பிக்க தவரிய அல்லது கோரப்பட்ட போது மாதிரிகளை சமர்ப்பிக்க தவரிய விநியோகத்தினருக்கு அறிவிப்பு இன்றி பதிவு ரத்து செய்யப்படும்.

20. 2023 ஆம் வருடத்திற்கான விநியோகத்தினரை பதிவு செய்வது குறித்து இறுதி முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு செயலாளருக்கு உள்ளது.